நீங்கள் இங்கே பேசக்கூடாது. அதையெல்லாம் என்னுடைய அறையிலே வந்து பேசலாம். (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்த பிரச்சினையை, இங்கே வந்து திரும்பத் திரும்பக் கேட்கக்கூடாது. நாளைய தினம், அந்தப் பிரச்சினையை, சாயல்குடி பிரச்சினையை, 'ஸ்பெஷல் மென்ஷ'னாக எடுத்துக் கொள்கிறேன். உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்ததை இங்கே பேச முடியாது. விதியைப் படியுங்கள். விதி 58-ஐப் படித்துப் பார்த்துவிட்டு, பிறகு சொல்லுங்கள். உட்காருங்கள். அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எம். ஆண்டி அம்பலம். இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். நான் அனுமதி மறுத்ததை இங்கே பேசக் கூடாது. (குறுக்கீடு) அதை காவல்துறை மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நாளை, இது 'ஸ்பெஷல் மென்ஷன்'-ஆக எடுத்துக் கொள்ளப்படும். உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு.எம். ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை.

அரவக்குறிச்சி தொகுதியில் சில கிராமங்களில் குடிநீர், செய்தித்தாள் காகித ஆலையின் கழிவு நீரினால் பாதிக்கப்படுவது குறித்து.

முற்பகல் 11.25

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி. கே.மரியம் உல் ஆசியா.

* *திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், அரவக்குறிச்சித் தொகுதி, புன்னம் கிராமம், சி. ரங்கபாளையம், வெள்ளியம்பாளையம் ஆகிய கிராமங்களில் அருகில் உள்ள தமிழ்நாடு செய்தித் தாள் காகித ஆலையின் கழிவு நீரினால் குடிநீர் பாதிக்கும் நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நி றுவனம் (டி.என்.பி.எல்) ரூ. 240 கோடி முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டு 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் தனது உற்பத்தியைத் துவக்கியது. இப்போது இந்நிறுவனம் தனது உற்பத்தியை ரூ.525 கோடி முதலீட்டுடன் இருமடங்காக்கும் விரிவாக்கப்பணியில் ஈடுபட்டுள்ளது. தற்சமயம் இந்த ஆலை நாளொன்றுக்கு 40,000 கன மீட்டர் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை பாசனத்திற்காக வெளியேற்றிக் கொண்டிருக்கிறது.

கவன ஈர்ப்பு அறிக்கையில் கூறியுள்ளபடி டி.என்.பி.எல். லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரானது புன்னம், புன்னம் சத்திரம். சி.ரங்க பாளையம், வெள்ளியம் பாளையம் கிராமங்களை சென்றடைவதில்லை. மேற்கூறியுள்ள நான்கு கிராமங்களும் டி.என்.பி.எல்.-லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரால் பயன் பெறும் கிராமங்களிலிருந்து ஒன்று அல்லது இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளன.

பொன்னியா கவுண்டன் புதூர் கிராமம், டிஎன்பிஎல்லில் கழிவு நீரேற்று பாசனத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் ஐந்து கிராமங்களில் ஒன்றாகும். மற்ற 4 கிராமங்கள் முறையே மூலிமங்கலம், பாண்டி பாளையம், தாதம் பாளையம் மற்றும் பழமாபுரம் ஆகியவை. இந்த 5 கிராமங்களும். டி.என்.பி.எல்லின் கழிவு நீரேற்று பாசனத் திட்டத்திற்காக டி.என்.பி.எல். நிறுவியுள்ள குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைகின்றன. டி.என்.பி.எல்லில் உள்ள கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையமானது. இந்தியாவிலுள்ள சுத்திகரிப்பு நிலையங்களில் ஒரு மிக சிறந்த நிலையமாகும். தற்சமயம் கழிவு நீர் சுத்திகரிப்புக்காக டி.என்.பி.எல்.ஆண்டொன்றுக்கு ரூ. 1.65 கோடி செலவிட்டுக் கொண்டிருக்கிறது. விரிவாக்கத் திட்டத்தின் கீழ் டி.என்.பி.எல். ஆலையானது ஒரு மேம்படுத்தப் பட்ட சுத்திகரிப்பு முறையை மேற்கொண்டு இருக்கிறது. இதற்காக ரூபாய் 5 கோடி முதலீட்டில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்ட பிறகு டி.என்.பி.எல்.லில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் தரம் மேலும் அதிகரிக்கும். விரிவாக்கப் பணிகள் முடிவடைந்த பிறகு டி.என்.பி.எல். நிறுவனம் ஆண்டொன்றுக்கு 4 கோடி ரூபாய் கழிவு நீர் சுத்திகரிப்பதற்காக செலவிடும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஜுலை 1994 மற்றும் டிசம்பர் 1994-க்கு இடைப்பட்ட காலத்தின் போது டி.என்.பி.எல். லின் சுத்தகரிக்கப்பட்ட

கழிவு நீரை ஆய்வு செய்து அளித்த அறிக்கையின் படி, மேற்படி சுத்தகரிக்கப்பட்ட கழிவு நீரானது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் குறிப்பிட்டுள்ள உயிரியல் பிராணவாயு தேவை, இரசாயன பிராணவாயு தேவை மற்றும் திடப்பொருள் மிதப்பு அளவீடுகளுக்கு உட்பட்டே உள்ளது என்பது தெளிவாகியது.

டி.என்.பி.எல்.--லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பரிசோதனை செய்து அளித்த முடிவுகள்

வரிசை எண்கள் (1)	அளவீடுகள் (2)	த.நா.மா.க வாரியத்தின் வரையறைக்கப்பட்ட அளவீடுகள். (3)	ஜூலை '94 (4)	ஆகஸ்டு '94 (5)	செப்டம்பர் '94 (6)	அக்டோபர் '94 (7)	நவம்பர் '94 (8)	டிசம்பர் '94 (9)
1.	மொத்த திடப் பொருள் மதிப்பு எம்ஜி/எல்	100	40	39	74	47	23	96
2.	உயிரியியல் பிராணவாயு தேவை, எம்ஜி/எல்.	30	29	22	30	15	15	8
3.	இரசாயன பிராணவாயு தேவை, எம்ஜி/எல்.	250	203	216	160	108	54	135

தமிழ்நாடு காகித ஆலை ஒரு கூட்டுறவு கழிவு நீரேற்றுப் பாசன சங்கம் உருவாகக் காரணமாயுள்ளது. இதன்படி டி.என்.பி.எல். புகளூரில் அமைந்துள்ள சர்க்கரை ஆலை, மூலிமங்கலம், பாண்டி பாளையம், பொன்னியாகவுண்டர் புதூர், தாதம்பாளையம், பழமாபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள 1,430 ஏக்கர் நில உரிமையாளர்களான 467 விவசாயிகள் மற்றும் நீரேற்று பாசன சங்கம் சேர்ந்து இந்த கூட்டுறவு நீரேற்று பாசன சங்கத்தை உருவாக்கியுள்ளனர். டி.என்.பி.எல்-லின் கழிவு நீரை சுத்தகரிப்பு செய்முறையின் ஒரு பகுதியாக, நிலங்களுக்கு

ஊட்டமளிக்கும் உரங்களாக யூரியா மற்றும் டி.ஏ.பி. ஆகியவை மேற்படி கழிவு நீரில் கலக்கப்படுகின்றன. இதன்மூலம் பல்லாண்டு காலமாக தரிசாகக் கிடந்த 1,430 ஏக்கர் நிலங்கள் பயிரடத் தக்க நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

டி.என்.பி.எல்.-லின் சுத்தகரிக்கப்பட்ட கழிவு நீரின் உதவியால் 1,000 ஏக்கர்களுக்கு மேல் விவசாயப் பணிகள் துவக்கப்பட்டு கரும்பு, கடலை, எள் மற்றும் வெங்காயம் போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. சில விவசாயிகள் இரண்டு பயிர்களை அறுவடை செய்துள்ளனர். டி.என்.பி.எல்.-லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் நிலங்களை வளமாக்கும் தன்மையைப் பற்றி இந்து நாளிதழில் 1-8-1994 அன்று செய்து வெளிவந்துள்ளது.

இது வரையில் டி.என்.பி.எல். நிர்வாகம் இத்திட்டத்திற்காக ரூ. 1.24 கோடி நிதி உதவி செய்துள்ளது. இதில் ஆயக்கட்டு பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபாய 52 இலட்சமும் அடங்கி உள்ளது. டி.என்.பி.எல்.லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரால் பயன்பெற்றுள்ள புஞ்சை புகளூர் மற்றும் தோட்டக்குறிச்சி விவசாயிகள் டி.என்.பி.எல்.-லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை தொடர்ந்து அளிக்கக் கோரி உள்ளனர்.

டி.என்.பி.எல்.-லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் மாசுத் தன்மையைப் பற்றி ஒரு அரசு சாரா நிறுவனம் 1994-ம் ஆண்டு ஜனவரி மாதம் உலக வங்கிக்கு கொடுத்த முறையீட்டிற்கு, உலக வங்கி அளித்த பதிலில், டி.என்.பி.எல்.-லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரானது, இந்திய தர நிர்ணய செயலகம் (Bureau of Indian Standards) வரையறுத்துள்ள தன்மைகளுக்கு ஒத்திருக்கிறது எனக் கூறியுள்ளது.

1994-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் உலக வங்கியின் மறு ஆய்வுக் குழு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தலைவரைச் சந்தித்து, டி.என்.பி.எல்.-லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் த்ன்மைகளைப் பற்றி விவாதித்தது. விவாதத்திற்கு பின்னர் உலக வங்கி குழு தனது அறிக்கையில் கீழ்க்காணும் விவரங்களைத் தெரிவித்துள்ளது:-

(1) டி.என். பி.எல். தற்போது அரசு சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளுக்கு நிர்ணயித்துள்ள குறியீடுகளுக்கு இயங்கி நடக்கிறது. மாசுக் கட்டுப்பாடு வாரியம் மாதா மாதம் தனது சோதனைச் சாலைகளில் பகுப்பாய்வு செய்த மாதிரிகள், டி.என்.பி.எல்.-லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் தன்மைகள் முன்னேற்றமடைந்துள்ளன என்பதைக் குறிக்கின்றன.

(2) தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் டி.என்.பி.எல்.-லின் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயலாக்கத்தைப் பற்றி மனநிறைவு

கொண்டுள்ளது. மேலும், டி.என்.பி.எல். தனது சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரைப் பயன்படுத்தி பயிர்களை வளர்த்தும், கரும்பு, நெல், கேழ்வரகு முதலிய பயிர்களின் விளைச்சலை அதிகரிக்கச் செய்யும் முயற்சிகளும் பாராட்டுக்குரியன.

இதைத் தவிர மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தென்மண்டல பிரிவு டி.என்.பி.எல்.-லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரைப் பற்றி 24-6-1994 அன்று ஒரு ஆய்வு நடத்தியது. அந்த ஆய்விற்குப் பிறகு மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் 3-10-1994 அன்று ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது. அந்த அறிக்கை தற்சமயம் டி.என்.பி.எல்.-லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினால் நிலத்தடி நீர் மாசுபடும் கேடு ஏதுமில்லை என்று கூறியுள்ளது.

மேற்கூறிய விளக்கங்களின் மூலம் டி.என்.பி.எல்-லின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினால் குடிநீர் பாதிப்பு மற்றும் மாசு ஏற்படும் நிலை இல்லை என்பது தெளிவாகிறது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசியா கண்டத்திலேயே ஆட்சி நிர்வாகத் திறனிலே ஒரு அரிமா என்று போற்றப்படும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) சீரிய முயற்சியினால் ஆசிய நாடுகளிலேயே தலைசிறந்த காகித ஆலையாக விளங்கும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் சார்பில் கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையத்தை நவீன முறையில் விரிவாக்கம் செய்திருப்பதற்கு பொதுமக்கள் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் விவர அறிக்கையில், பொன்னியாகவுண்டர் புதூர் மட்டும் டி.என்.பி.எல்-இன் கழிவு நீரேற்றும் பாசனத் திட்டத்திற்காக டி.என்.பி.எல். நிறுவியுள்ள குடிநீர் வழங்கும் திட்டத்தில் சேர்ந்து பயனடைவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அந்த கிராமத்திற்குட்பட்ட பகுதிகளிலும் புன்னம் சத்திரம், சி. ரெங்கபாளையம், வெள்ளியம்பாளையம் ஆகிய கிராமங்களும் டி.என்.பி.எல். நிறுவன கழிவு நீரால் பாதிக்கப்பட்டிருப்பதை மேற்கண்ட கிராமங்களில் பொதுமக்கள் குறைகளைக் கேட்கச் சென்றபோது நேரிலேயே பார்த்தேன். அந்தக் கிராமங்களில் தண்ணீர் நிறம் மாறுபட்டுக்காணப்படுகிறது. ஆழ்குழாய்க் கிணறுகளில் தண்ணீரும் நச்சுத்தன்மையுடன் காணப்படுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுவினர் பரிசோதனைக்காக பாதிக்கப்பட்டுள்ள மண், பயிர், மாதிரி நீர் மற்றும் இரசாயனப் படிவங்கள் ஆகியவற்றைச் சேகரித்து டி.என்.பி.எல்.-இன் கழிவு நீரினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். மேலும் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இது சம்பந்தமாக நான் தந்த விவாதப் பொருள்களுக்கான பதிலிலும், இக்கிராமங்களில் குடிநீர் மாசுபடாமல் இருக்க மாசு கட்டுப்பாடு

வாரியத்தின் மூலம் செய்தித்தாள் நிறுவனத்தின் கழிவுகளைத் தகுந்த முறையில் சுத்திகரிப்புச் செய்யலாம் என்று தெரிவிக்கப்படுகிறது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, டி.என்.பி.எல். நிறுவன கழிவு நீரால் பாதிக்கப்பட்ட புன்னம்சத்திரம், சி. ரெங்கபாளையம், வெள்ளியம்பாளையம் ஆகிய கிராமங்களுக்கும் டி.என்.பி.எல். நிறுவி உள்ள குடிநீர் வழங்கும் திட்டத்தில் சேர்த்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, புகளூரில் அமைந்துள்ள தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் ஆலையிலிருந்து வெளியேறுகிற கழிவு நீரைப் பயன்படுத்தி அந்தப் பகுதியிலே இருக்கிற மூலிமங்கலம், பாண்டிபாளையம், பொன்னியாகவுண்டன் புதூர், தாதம்பாளையம், பழமாபுரம் ஆகிய கிராமங்களில் சுமார் 1,470 ஏக்கர் நில உரிமையாளர்கள் 467 விவசாயிகள் ஆகியோர்களை இணைத்து, தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம் தனது கழிவு நீரைச் சிறந்த முறையில் பாசனத்திற்குப் பயன்படுத்த ஒரு கூட்டு நீரேற்று பாசன சங்கத்தை உருவாக்கி உள்ளது. எனவே, அந்தப் பகுதியில், மூலிமங்கலம், பாண்டிபாளையம் தாதம்பாளையம், பழமாபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள நிலங்கள் அந்த நீரின் மூலம் பாசனம் பெறுவதால் அங்கே இருக்கிற நிலத்தடி நீர் கெட்டு விடும் என்கிற காரணத்தினாலே தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனமே தனியாக ஒரு குடிநீர்த் திட்டத்தைத் தயாரித்து அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட ஊர்களில் பொன்னியாகவுண்டன்புதூர் மட்டும் அந்தப் பாசனப் பகுதியிலே வருகிற காரணத்தினால், அந்த ஊரை உள்ளடக்கிய குடிநீர்த் திட்டம் விரிவாக்கப்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மற்ற ஊர்களில் இந்த கழிவுநீர் மூலம் நிலத்தடி நீர் கெடுகிற நிலமை ஏற்படுகிறபோது தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம் அந்தக் குடிநீர்த் திட்டத்தை அந்தப் பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்ய பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர், தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்தின் ஆலையிலிருந்து வெளியேறுகிற கழிவு நீர் காரணமாக ஒரு விளக்கத்தைக் கேட்டார்கள். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஜுலை 1994 மற்றும் அதற்கு இடைப்பட்ட காலத்தின்போது, சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை ஆய்வு செய்தது. அந்த ஆய்வு அறிக்கையின்படி மேற்படி சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரானது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள உயிரியல் பிராண வாயு B.O.D. இரசாயன பிராண வாயு C.O.D. இவைகள் எல்லாம் குறிப்பிட்ட அளவுக்கு உள்ளே இருக்கிற காரணத்தினாலே அதில் மாசு ஏற்படுவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1995 ஏப்ரல் 4

முற்பகல் 11.30

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருந்த இந்த புன்னம் சத்திரம், சி.ரங்கப்பாளையம், வெள்ளியம்பாளையம், ஆகிய கிராமங்களுக்கும், இந்தத் தமிழ்நாடு காகித ஆலை நிறுவனக் குடிநீர் வழங்கும் திட்டத்தில் ஏற்கெனவே பொன்னியாகவுண்டன்புதூரில் இருப்பதுபோல் மேற்கண்ட கிராமங்களையும் அந்தக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மேலும் இந்த காகித உற்பத்தியை இரண்டு மடங்காக பெருக்குவதற்கு காகித உற்பத்தி நிறுவனத்தை விரிவாக்குவதற்கும், நவீனப்படுத்துவதற்கும், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கரூர் வருகை தந்திருந்தபோது அடிக்கல் நாட்டினார்கள். அவ்வாறு விரிவுபடுத்தும்போது இன்னும் அதிகமாக கழிவுநீர் வெளியிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மேலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி நமது அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்றும் அதே நேரத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி மரியம் உல் ஆசியா, இதிலே ஏதாவது ஒன்றிரண்டு கேள்விதான் கேட்கலாம். நீங்கள் விரிவாகப் பேசிக்கொண்டிருக்கக் கூடாது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தின் மூலம் கரூர் பகுதியிலுள்ள நெரூர் என்ற கிராமத்தில் கழிவு நீரால் குடிநீர் மாசுபட்டு அங்கே ஒரு சிலர் இறக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனவே, அந்தப் பொதுமக்கள் அசுத்த நீர் கலந்ததன் மூலமாக இறப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று கருதுகிறார்கள். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப்பகுதிகளுக்கும் இந்த காகித ஆலை நிறுவனத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு இருக்கின்ற அக்கறை போல் அந்தப் பகுதியிலே எனக்கும் இருக்கிறது. காரணம் இந்தச் செய்தித்தாள் நிறுவனமே என்னுடைய தொகுதியிலேதான் இருக்கிறது.(சிரிப்பு) ஆகவே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் இது என்னுடைய துறையின் கீழ் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆலை உங்களுடைய தொகுதியிலே இருக்கிறது. அந்தக் கழிவு நீர் பூராவும் அவருடைய தொகுதிக்குப் போகிறது என்பதுதான் அவருடைய வருத்தம். (சிரிப்பு)

1995 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: இல்லை, கழிவுநீர் என்னுடைய தொகுதிக்கும் வருகிறது. அவருடைய தொகுதிக்கும் வருகிறது. உறுப்பினர் அவர்கள் இந்தக் கழிவுநீர் மூலம் நெரூர் பகுதியிலே சில பேர் இறந்துவிட்டார்கள் என்று சொன்னார், அது தவறு. இந்தக் கழிவு நீர் நெரூர் வரை செல்கின்ற புகளூர் பாசன வாய்க்காலில் முதலில் விட்டுக்கொண்டிருந்தார்கள். அதை இப்போது விடக் கூடாது என்று அந்த ஆலைக்கு அறிவுறுத்தப்பட்டு, இப்போது அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பாசனத்திற்கே இப்போது பயன்படுத்தப்படுகிறது. உறுப்பினர் விரிவாக்கத் திட்டத்தின் கீழே இன்னும் அதிகமாக கழிவுநீர் வெளியேறுமே அதற்கு என்ன திட்டத்தை வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அந்தத் செய்தித் தாள் ஆலை நிர்வாகமே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே இருக்கின்ற புஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்து தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனமே அந்தக் கழிவுநீரைப் பயன்படுத்தி பாசனத்தை செய்கின்ற ஒரு திட்டத்தை வைத்திருக்கிற காரணத்தினாலே உறுப்பினர் அச்சப்படுவதைப் போல எதுவும் எதிர்காலத்தில் நடக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண். 34 — நுகர்பொருள் வழங்கல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்--தொடர்ச்சி. மானிய கோரிக்கை எண் 34. நுகர்பொருள் வழங்கல், மாண்புமிகு உணவு அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நுகர் பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.466,21,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1023, திரு. ஆர். சிங்காரம்.